# பேலியகொட நகர சபை

## கம்பஹா மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2012 திசெம்பர் 20 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட சிறந்த தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் பேலியகொட நகர சபை 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியுள்ளது என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்படும் எனது அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த காரணிகளால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பேலியகொட நகர சபையின் செயலாற்றுகை தொடர்பான நிலவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அச்செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகளையும் காசுப்பாய்ச்சல் கூற்றையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டிற்குரித்தான ரூபா 23,757,429 தொகையான இனங்காணப்படாத கடன்கொடுத்தோர் மீதி திரண்ட நிதியத்திற்கு அறவிடப்பட்டு பதிவழிக்கப்பட்டிருந்தது. அம்

மீதியில் இனங்காணப்பட்ட ரூபா 6,318,466 தொகையான கடன்கொடுத்தோர் மீதியும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய கடன் (கலன்களின் கடன்) மீதி ரூபா 1,002,172 ஆன போதிலும் ரூபா 996,279 ஆகக் கணக்கிடப்பட்டிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்திற்கு மேலான மீண்டெழும் செலவினம் ரூபா 5,555,731 ஆக இருந்ததுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்திற்கும் மேலான வருமானம் ரூபா 18,967,376 ஆக இருந்தது.

### 2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(i) ஊழியர் கடன் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரமான மீதி ரூபா 15,245,095 ஆன போதிலும் ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 14,872,509 ஆகக் காணப்பட்டதுடன் ரூபா 373,086 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ii) கடன்கொடுத்தோர், கடன்பட்டோர் வைப்புக்கள், முற்கொடுப்பனவுகள் மற்றும் வருமானப் பதிவேடுகள் தீர்க்கப்பட்டிராமையால் அக் கணக்குகளில் காண்பிக்கப்பட்ட மீதிகள் கணக்குடன் ஒப்பிட முடியாதிருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டவை | உள்ளபடி யானவை | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | வீதவரியும் வரியும் | 38,500 | 28,206 | 23,023 |
| (ii) | குத்தகை வாடகை | 2,219 | 2,020 | 789 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,856 | 1,511 | 1,691 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 20,844 | 5,399 | 78 |

### 2.3.2 நிலுவை வருமானத்தை அறவீடு செய்யாமை

மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 23,022,562 தொகையும் குத்தகை வாடகையான ரூபா 788,600 தொகையும் அனுமதிப்பத்திரக் கட்டணமான ரூபா 1,690,704 தொகையும் அறவிடப்படுவதற்காக நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 170 அ(2) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 கடை வரி

2011 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு 33 கடைகளுக்காக நிலுவை வாடகை வருமானமான ரூபா 109,463 தொகை காணப்பட்டதுடன் வாடகை நிலுவையாகக் காணப்பட்ட காலம் 3 ஆண்டுகளைப் பார்க்கிலும் அதிகமாகக் காணப்பட்ட போதிலும் குத்தகை உடன்படிக்கையின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்பட்டு வாடகையை அறவிடுவதற்கோ அல்லது குத்தகையாளரைக் கடையிலிருந்து அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 செயற்பாடற்ற நடைமுறைச் சொத்துக்கள்

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 ஆண்டு காலத்திற்கு மேல் செயற்பாடற்று பங்கிலாபங்கள் பெறப்படாது இலங்கை மின்சார சபையால் வழங்கப்பட்ட பங்குகளின் உறுதிப்படுத்தப்பட்ட பெறுமதி ரூபா 1,288,930 ஆகக் காணப்பட்டது.

(ஆ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்ட ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா

15,245,094 ஆகக் காணப்பட்டதுடன் இதில் நீண்டகாலமாக அறவிடப்படாதிருந்த ரூபா 280,708 தொகையான மீதியும் காணப்பட்டது.

## 2.5 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

நகர சபையின் வெற்றிடங்கள் நிலவும் முகாமைத்துவ உதவி மேலதிக தரப் பதவியில் பதில்கடமையாற்றுவதற்கு முகாமைத்துவ உதவியாளர் 1 ஆம் தர உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

அவருக்கு தாபனவிதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.5.2 இன் பிரகாரம் பதில் கடமைச் சம்பளம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் தாபனவிதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.5.4 இன் பிரகாரம் பதில் கடமைச் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 60,690 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.6 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிராத கொடுக்கல்வாங்கல்கள்

2010 இற்கு முன்னைய காலப்பகுதிக்கு உரித்தான இனங்காணப்பட்டிராத ரூபா 23,751,430 தொகையான கடன்கொடுத்தோர் மீதி அங்கீகரிக்கப்படாது திரண்ட நிதியத்திற்கு அறவிடப்பட்டிருந்தமையால் பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கணக்காய்வு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்